DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF THE CHIEF JUDICIAL MAGISTRATE, SIVAGANGAI.

| | | |
|---|---|---|
| Case No. | : | S.C. 66/2021 |
| Deposition of Witness for | : | P.W.1 |
| Name | : | **திருப்பதி** |
| Father's Name | : | **சுப்பிரமணியன்** |
| Village | : | |
| Taluk | : | |
| Calling | : | |
| Age | : | |

**(வழக்கின் 2வது எதிரி P.T.warrant-மூலம் காணொளி வாயிலாக ஆஜர்படுத்தப்பட்டார், எதிரிகள் 1வது எதிரி ஆஜர் இல்லை. 1வது எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழ் மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது.)**

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1973 of the day of 02.02.2026

**முதல் விசாரணை:**

நான் தற்போது சிவகங்கையில் குடியிருந்து டிரைவராக வேலை பார்த்து வருகிறேன். இவ்வழக்கின் எதிரிகளை எனக்கு தெரியாது. வழக்கின் சம்பவம் குறித்து எனக்கு எந்த விபரமும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையதுதான். புகார்மனுவில் உள்ள விபரங்கள் எனக்கு தெரியாது. புகார் மனுவில் உள்ள **கையொப்பம் மட்டும் அ.த.சா.ஆ.**1 ஆகும். வழக்கு சம்மந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

**(அரசுதரப்பில் சாட்சியை பிறழ்சாட்சியாக அனுமதிக்கும்படி அனுமதி வேண்டப்பட்டதன் அடிப்படையில் அனுமதி வழங்கப்பட்டது.)**

**அரசுத்தரப்பில் குறுக்குவிசாரணை** :

**1.** கடந்த 08.09.2016 ம் தேதி சுமார் 10.00 மணியளவில் நானும் ராஜாவும் சிவகங்கை காந்தி வீதியில் நடந்து கொண்டுவந்திருந்தோம் என்றும் எங்களது பின்னால் வந்த TN 59 AK 5834 என்ற வாகனத்தில் வந்தவர்கள் காரை நிறுத்தி கையில் அருவாளுடன் இறங்கி தலைக்கு மேல் சுழற்றி தாங்கள் பெரிய ரவுடிடா என்று சொன்னார்கள் என்றும் அந்த வழியாக வந்துகொண்டிருந்த எனது கழுத்தில் அருவாளை வைத்து என்னிடமிருந்த பணத்தை கேட்டு மிரட்டினார்கள் என்றும் பயந்து நான் ஓட முயற்சித்தபோது எதிரி தங்கராஜ் என்பவர் என் தலையை நோக்கி வாளால் ஓங்கி வெட்டினான் என்றும் நான் அப்போது விலகிக்கொண்டன் என்றும் அப்போது என்னை காப்பாற்ற வந்த நண்பர் ராஜாவும் எனக்கு பின்னால் வந்த இருவரும் ஓடி வந்தார்கள் என்றும் எதிரிகள் இருவரும் அருவாளை தரையில் உரசி தீப்பறக்க வைத்தார்கள்.

2. அப்போது என்னை காப்பாற்ற வந்த பொதுமக்களும் பயந்து ஓடினார்கள் என்றும் அப்போது தங்கராசு என் கழுத்தில் வாளை வைத்து அழுத்தினான் என்றும் மேலும் என் வயிற்றிலும் வைத்து அமுக்கினான் என்றும் பின்னர் எதிரி லட்சுமணன் வாளை வைத்து என்னை அமுக்கினான் என்றும் என் பையில் இருந்த வாடகை பணம் ரூ.5000/-ஐ எடுத்துக்கொண்டார்கள் என்றும் போகும்போது எனக்கு கொலை மிரட்டல்கள் விடுத்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில்சொல்லிவிட்டு தற்போது எதிரிகளுக்கு ஆதரவாக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:**

நான் முதல் விசாரணையில் சொன்ன விபரங்களை தான் போலிசார் விசாரணையிலும் சொன்னேன் என்றால் சரிதான். புகார் மனுவில் உள்ள கையொப்பம் அதற்காக தான் போட்டேன் என்றால் சரிதான்.

**மறு விசாரணை:** இல்லை

N SENTHIL MURALI
Digitally signed by N SENTHIL MURALI
Date: 2026.02.02 10:42:34 +0530

**உதவி அமர்வு நீதிபதி,**

**தலைமைக் குற்றவியல் நடுவர்.**

**சிவகங்கை..**